எடுத்துக்கொண்டிருக்கிறோம். எனவே அந்த நிதியுதவி கிடைக்கின்றபோது இது செய்யப்படும். இருந்தாலும் முக்கியத்துவத்தைக் கருதி வேகமாக அதைச் செய்வதற்கு துறையை நான் கேட்டுக்கொள்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கனிவான பதிலுக்கு நன்றி, இந்த ஆண்டே கனிவுடன் கருணையுடன் பரிசீலித்து ஆவன செய்வாரா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இந்த ஆண்டே செய்வதற்கு நான் ஏற்கெனவே சொன்னபடி நிதிதான் பிரச்சினை. அந்தப் பட்டியலிலே இவைகள் சேர்க்கப்படவில்லை. இதைவிட இன்னும்கூட முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்ற பல்வேறு பணிகள் இந்த ஆண்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. எனவே எல்.ஐ.சி.யிலே பணம் கிடைக்குமானால் அதைச் செய்வதற்கு எந்தத் தடையும் இல்லை. எனவே அதைப்பற்றி துறை அதிகாரிகளோடு மீண்டும் பேசி உரிய நடவடிக்கை மேற்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 343, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

343—

போக்குவரத்துத்துறை வேலை வாய்ப்பில் பொறியியல் மற்றும் எழுத்தர் பணியிடங்களுக்கு ஆதிதிராவிடர்களுக்கான இட ஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்தல்.

***22314**— திரு. வே. பெரியசாமி :*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துத் துறையில் வேலை வாய்ப்பில் ஆதிதிராவிடர்களை 18% சேர்க்க வேண்டும் என்ற நிலையில் ஓட்டுநர், நடத்துநர் பணியிடங்களுக்கு மட்டும் சேர்த்துவிட்டு மற்ற பொறியியல் எழுத்தர், டி.எம்.இ. போன்ற பணியிடங்களுக்கு 18% சேர்க்கப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தமட்டில் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் பணிக்கு எப்படி ஆதிதிராவிடர்

1994 ஏப்ரல் 22]

வகுப்பினர்களுக்கு 18 விழுக்காடு என்ற அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறதோ அதே அடிப்படையில்தான் மற்ற பணிகளுக்கும் ஆட்கள் நிரப்பப்படுகின்றனர். பல போக்குவரத்துக் கழகங்களில் முன்னாள் அரசுப் போக்குவரத்துத்துறை பணியாளர்களும் பணிபுரிந்து வருவதால் சிறிது விழுக்காடு குறைவாக உள்ளது. இதையும் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத்துறையில் மிகச் சிறப்பான முறையிலே இந்தியாவிற்கே வழிகாட்டக் கூடிய நிலையில் சிறப்பு அம்சத்தை பெற்று இருக்கின்ற நம்முடைய தமிழக போக்குவரத்துத் துறையில் 18% இட ஒதுக்கீட்டை ஓட்டுநர், நடத்துநர் போன்றவர்களுக்கு அதிகமாகவே கொடுத்திருப்பதாக நான் அறிகிறேன். மற்ற பொறியியல் எழுத்தர், டி.எம்.ஈ. இன்னும் பல்வேறு கேட்டகரிகள் இருக்கின்றன. அங்கே அவைகளில் கடந்த காலங்களில் தனியார் இடமிருந்து பேருந்துகளை வாங்குகின்றபோது அவர்கள் அந்தத் தகுதிக்கு தரப்பட்ட சதவிகிதத்தை எடுக்காமல் இருப்பதாக நான் அறிகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே அருள்கூர்ந்து வருகின்ற காலங்களில் தேவைப்படுகின்ற இடங்களுக்கு இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களில் முன்னாள் அரசுப் போக்குவரத்துத்துறைப் பணியாளர்கள் பணிபுரிகின்ற போக்கு வரத்துக் கழகத்திலே இது போன்ற இடர்ப்பாடுகள் இருக்கும். அதை நாங்கள் குறைந்திருக்கின்ற இடத்திலே சரி செய்து கொண்டிருக்கிறோம். அதே போல, போக்குவரத்துக் கழகத்தைப் பிரிக்கின்றபோது அந்த சீனியாரிட்டி அடிப்படையிலே சில பேரை பல இடங்களுக்கு மாற்றிக்கொண்டு இருக்கிறோம். அதிலே இந்த சிறு சிறு குறைபாடுகள் இருக்கும். ஆனால் சில போக்குவரத்துக் கழகங்களிலே பிரிக்கின்றபோது கூடுதலாகக் கூட தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு பணிகளில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார் வழியிலே வந்திருக்கின்ற வீரமணி அவர்களே சமூக நீதிகாத்த வீராங்கனை என்ற பட்டத்தைத் தந்து இருக்கிறார்கள். எனவே இந்த அரசை பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக சேவை செய்கின்ற அரசு என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையை தட்டும் ஒலி).

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது நம்முடைய 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளர், விடுதலை வீரர், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருடைய வாரிசாக விளங்குகிற வீரமணி அவர்களுக்கு பணங்களை அள்ளி வழங்கிய வள்ளல் நம்முடைய அம்மையார் அன்னையுடைய ஆட்சியில் அதை எடுத்துச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல. நிறைய நன்மைகளைச் செய்திருக்கின்ற டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு 5 கோடியில் மணி மண்டபத்தைக் கட்டுவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்கார் பெயரிலே எங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். ஏழை தாழ்த்தப்பட்ட இரண்டாம் வகுப்பிலே படிப்பை முடித்து விடுகின்ற பிள்ளைகளுக்கு 3, 4, 5 ஆம் வகுப்பு என்று தொடர்ந்து படிப்பதற்கு ஆண்டுக்கு 500 ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. இன்னும் பல்வேறு வகையான முற்போக்கான திட்டங்களை ஆதிதிராவிடர் மக்களுக்கு செய்திருக்கின்ற இந்த நேரத்தில் நாங்கள் நன்றி மறப்பது நன்றன்று என்று சொல்வது போன்று நன்றியை மறவாமல் இருக்கிறோம். தங்கள் துறையில் ஏறத்தாழ இரண்டு எம்.டி.க்கள்தான் மேல் பதவியில் இருக்கிறார்கள். 19 துறை உங்கள் கைவசத்தில் இருக்கிறது. போக்குவரத்துத் துறையில் நிறைய ஜி.எம்.கள், டி.எம்.இ. போன்ற பதவிகள் இருக்கின்றன. கடந்த காலங்களில் அவர்கள் ஆரம்பத்திலேயே ஏ.ஈ., டி.ஈ., போன்ற பதவிகளுக்கு எடுக்காத காரணத்தினால் பணி உயர்வு வழங்க முடியாத ஒரு நிலைமை - துர்ப்பாக்கியமான சூழ்நிலைக்கு அன்றைக்கு உட்படுத்தப்பட்டு, இன்றைக்கு நீங்கள் வந்ததற்குப் பின்னாலே நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள். அருள்கூர்ந்து மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வருங்காலங்களில் கீழே உள்ள அந்த நடத்துநர், ஓட்டுநர் பதவிக்கு எடுத்த விழுக்காடு சரியாக இருந்தாலும், மற்றப் பதவிகளுக்கு முறைப்படி நீங்கள் ஆவன செய்வீர்களா என்பதை உங்கள் மூலம் கனிவான பார்வைக்குப் பணிவாகத் தெரிவித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10.10

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபொழுது நிர்வாக இயக்குநர், அதேபோன்று பொது மேலாளர் பதவிகளைப் பற்றி சொன்னார்கள். மொத்தம் நம்முடைய துறையிலே 25 நிர்வாக இயக்குநர்கள் இருக்கிறார்கள். அதிலே தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசிலேதான் 4 பேர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. 25 பேர்களுக்கு 4 பேர்கள் இருக்கிறார்கள் நிர்வாக இயக்குநர்கள். ஆகவே,

1994 ஏப்ரல் 22]

நீங்கள் கூறுவதைக் காட்டிலும் - 18 சதவீததைக் காட்டிலும் எங்கோ உச்சத்திலே இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 344, திரு. உ. பலராமன், இருக்கையில் இல்லை. திரு. எஸ். ஜெயக்குமார், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

344—

பல்லவன் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் பழுதடைந்த இருக்கைகளைப் புதுப்பித்தல்.

**22735— திரு. உ. பலராமன் :*

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல்லவன் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் பழுதடைந்துள்ள இருக்கைகளை அகற்றி புதிய இருக்கைகள் பொருத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பல்லவன் போக்குவரத்துக்கழகப் பேருந்துகளில் பழுதடைந்துள்ள இருக்கைகளை அகற்றி புதிய இருக்கைகள் மாற்றுவதற்கு உடனுக்குடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியை உண்மையிலேயே மக்களெல்லாம் பாராட்டுகின்றார்கள், பல்லவன் போக்குவரத்துக் கழகத்தினுடைய பஸ்களையெல்லாம் பார்த்து இருந்த போதிலும் ஓரிரு பஸ்களிலே பின்னாலே ரெக்ஸின் போன்றவைகளெல்லாம் கிழிந்து அங்கே மக்கள் உட்காருகின்ற நிலைமை இல்லாத நிலைமை இருக்கின்றது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதை உடனடியாக நீக்குவதற்கு நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சி உரிய நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெக்ஸின் எல்லாம் கிழிகிறது என்பதற்காகத்தான் இப்பொழுது புதிய மாற்றத்தை உருவாக்கி அந்த ரெக்ஸின் போன்றவைகளை மாற்றிக் கொண்டிருக்கிறோம். அது கிழியாமல் இருப்பதற்காக ரப்பரைஸ்ட் காயர் என்ற அந்தப் புதிய திட்டத்தை உருவாக்கி இந்த இருக்கைகளை நாங்கள் மாற்றிக் கொண்டிருக்கிறோம். அப்படி மாற்றுகின்றபொழுது அந்த இருக்கைகள் கிழிவதே இல்லை.